பொது நிருவாகச் சுற்றறிக்கை : 7/2007 (III)

எனது இலக்கம் :- EST-2/POLICY/03/0797
பொது நிருவாக மற்றும்
உள்நாட்டு அலுவல்கள அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு – 07

2012.07.10

அமைச்சுச் செயலாளர்கள்
மாகாண சபைகளின் செயலாளர்கள், மற்றும்
திணைக்கள தலைவர் அனைவருக்கும்

<u>அரச கரும மொழிக் கொள்கையைச் செயல்படுத்துதல்</u>

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 28.05.2007 திகதி இடப்பட்டு வெளியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007 மற்றும் 29.08.2007 திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007 (I) மீது தங்களது அவதனாத்தை கோறுகின்றேன். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்வரும் முறையில் திருத்துவதற்கு 23.05.2012ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம் பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007ல் முதலாம் பந்தியில் (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்ட 01.07.2007ம் திகதி தொடக்கம் அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும்/ நியமிக்கப்படும் அலுவலர்கள் 05 ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய அரச கரும மொழிகள் திறமையினைப் பெற்றுக்கொள்வதற்காக நிவராணக் காலமொன்று பின்வரும் வகையில் வழங்கப்படும்.

I. 01.07.2007 திகதி தொடக்கம் 30.06.2010 திகதி வரை அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட/ நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு விதிக்கப்பட்ட மொழித்திறமையளவை அடைந்துக்கொள்வதற்காக இப்போது வழங்கப்பட்டுள்ள ஐந்து (5) ஆண்டுகால பகுதிக்கு மேலதிகமாக, மேலும் இரண்டு (2) ஆண்டுகாலப் பகுதியை வழங்குதல்.

03. மேலும் பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007ல் 2-ம் பந்தியும், பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007 (I)ல் 03-ம் பந்தியில் பின்வருமாறு திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

I ‘‘சம்பள உயர்வுகள் இடைநிறுத்தப்படுதல்’’ என்பது ‘‘சம்பள உயர்வுகள் நிறுத்தப்படுதல்’’ எனத் திருத்தப்படுதல்

04. சம்பள உயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில், அலுவலருக்குரிய வேறு அரச கருமமொழித் திறமையைப் பெற்றுக்கொண்டப்போது, அத்திறமையைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்ட காலத்தினுள் பெறப்படுக்கூடியதாக இருந்த சம்பள அளவு மட்டத்தில் வைக்கப்பட வேண்டியதுடன், நிலுவைச் சம்பளம் வழங்கப்படுதல் கூடாது. அவ்வாறே அலுவலரின் சம்பள உயர்வு நினத்தில் மாற்றம் ஏற்படமாட்டாது.

ஒப்பம்/ பீ.பீ. அபேகோன்
செயலாளர்,
பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு